பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 09 2026 SUNDAY 6 45 AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரிக்ஸ் உறுப்பு நாடுகளிடையே வளர்ச்சி அடிப்படையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- பெண்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌகான் குறிப்பிட்டுள்ளார்.
- ஆணவக் கொலைகளை தடுக்க தனி சட்டம் இயற்றப்படும் என்று மாநில அமைச்சர் திரு. வன்னி அரசு தெரிவித்துள்ளார்.
- செவிலியர் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கான ஆணையை ரத்து செய்ய வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டிடிவி தினகரன் கேட்டுக்கொண்டுள்ளார்
- ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

-------------

தில்லி பிரகடனம் பரந்த மற்றும் வலுவான நோக்குடன் செயல்படும் பிரிக்ஸ் அமைப்பின் நம்பிக்கையை பிரதிபலிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், புத்தாக்கம், நிலைத்தன்மை, மக்கள் தொடர்பு உள்ளிட்ட வளர்ச்சி அடிப்படையிலான நடவடிக்கைகள் நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்த உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த பிரகடனத்தை பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் ஒருமனதாக ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் பொது உள் கட்டமைப்பு, குவாண்டம் தொழில்நுட்பம், அறிவியல் ஆராயச்சி புத்தொழில் நிறுவனங்களுக்கான சூழல் அமைப்பு ஆகிய துறைகளில் உறுப்புநாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

புதிய மேம்பாட்டு வங்கி கட்டமைப்பை வலுப்படுத்துவது குறித்து, உணவு, சுகாதாரம், எரிசக்தி பாதுகாப்பு, உள்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில், இணைந்து செயல்பட வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------

லட்சாதிபதி சகோதரிகள் திட்டம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இத்திட்டம் பெண்களின் தன்னம்பிக்கை மற்றும் கடின உழைப்பிற்கு கிடைத்த வெற்றியாகும் என்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

பெண்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, மகளிர் சுய உதவிக்குழுக்களின் பயனாளிகளுடன் காணொளி வாயிலாக அமைச்சர் கலந்துரையாடினார்.

-------------

பெண்களின் வாழ்வாதாரம், பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவேற்றும் வகையில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில மதுவிலக்கும் மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. விக்னேஷ் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டுவில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் கலந்துகொண்டு, கர்ப்பிணி பெண்களுக்கு பரிசு பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு, தங்க மோதிரம் வழங்கும் திட்டம், விரைவில் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக தெரிவித்தார்.

கர்ப்பிணி பெண்கள் உரிய பரிசோதனைகளை செய்து கொள்வதுடன், ஊட்டச்சத்து உணவுகள் மற்றும் யோகா பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

-------------

கோடை வெப்பம் காரணமாக அதிகரித்து வரும் மின் தேவையை சமாளிக்க கூடுதலாக 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

காற்றாலை மின் உற்பத்தி குறைந்துள்ளது, மின் அழுத்த குறைபாடு போன்ற பல்வேறு காரணங்களால், மின்தடை ஏற்படுவதை தவிர்க்கும் வகையிலும், சீரான மின் விநியோகத்தை உறுதி செய்யும் வகையிலும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மின் விநியோகத்தில் ஏற்படும் பாதிப்புகளை உடனடியாக சரி செய்யும் வகையில், சிறப்பு குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திகுறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-------------

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா இம்மாதம் 17-ம் தேதி நடைபெற உள்ள நிலையில, யாகசாலை பூஜைகள் தொடங்கியுள்ளன.

இதனையொட்டி, லட்சக்கணக்கான பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளுக்கான முன்னேற்பாட்டு பணிகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

-------------

ஆணவக்கொலைகளை தடுக்க தனி சட்டம் இயற்றப்படும் என்று மாநில சமூகநீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம், சிவகாமிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து சமூகத்தினருக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில், இந்தச் சட்டம் இருக்கும் என்று கூறினார்.

பழங்குடியின மக்களின் கல்வி, பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்த மாநில அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக அவர் கூறினார்.

சாதி உள்ளிட்ட சட்டம், ஒழுங்கு பிரச்சனைகளை தடுப்பதுடன் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார்.

-------------

தமிழகத்தில் காலியாக உள்ள செவிலியர் பணியிடங்களை தற்காலிகம் மற்றும் ஒப்பந்தம் அடிப்படையில் நியமனம் செய்வதற்கான அறிவிப்பு ஆணையை மாநில அரசு ரத்து செய்ய வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நான்கு லட்சத்து 75 ஆயிரம் செவிலியர்கள் அரசு பணிக்காக பதிவு செய்து காத்திருக்கும் நிலையில், இந்த அறிவிப்பை மாநில அரசு வெளியிட்டுள்ளது கண்டனத்திற்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

5 ஆண்டுகள் அல்லது அதற்கு கூடுதலாக பணியாற்றி வரும் ஊழியர்கள் அனைவரும் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற தவெக-வின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று திரு. டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

-------------

தருமபுரி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனையடுத்து, நீர்வரத்து மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

-------------

பலூசிஸ்தானில், மக்களுக்கு எதிராக பாகிஸ்தான் ராணுவம் ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்துள்ளதாக அந்நாட்டு மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

-------------

பிலிப்பைன்ஸில், பயணியர் படகு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 76 ஆக அதிகரித்துள்ளது.

-------------

மணிப்பூரில் இந்தோ - மியான்மர் எல்லைப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

-------------

ஹரியானா மாநிலம் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, ரத்ததானம் செய்வதில், முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

-------------

பல்வேறு குற்ற வழக்குகளில் தேடப்பட்டு வந்த தலைமறைவுக் குற்றவாளியான அம்ரித்பால் சிங் என்ற குர்பால் சிங்கை, மால்டோவா நாட்டிலிருந்து இந்தியாவிற்கு நாடு கடத்தப்படுவதை, சிபிஐ அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையையொட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, அனைத்து துறைசார்ந்த அதிகாரிகளுடன் ஆட்சியர் திரு நல்லசிவம் ஆய்வு செய்தார்.

-------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு மன்றத்தில், ஆயிரத்து 161 வழக்குகளுக்கு சமரசத் தீர்வு காணப்பட்டது.

-------------

விழுப்புரம் மாவட்டத்தில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு சார்பில், போதைப்பொருள் ஒழிப்பு குறித்து, பள்ளி மாணவ - மாணவியர் பங்கேற்ற விழிப்புணர்வு முகாம், சென்னை காவல் கண்காணிப்பாளர் திரு செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

-------------

தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் நடைபெற்ற தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், தேர்ந்தெடுக்கப்பட்ட 613 நபர்களுக்கு, பணி நியமன ஆணைகளை ஆட்சியர் திரு வைத்தியநாதன் வழங்கினார்.

-------------

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே நடைபெற்ற காளைகள் விடும் திருவிழாவில், தென் மாநிலங்களைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன.

-------------

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இன்றிரவு 8.00 மணிக்குத் தொடங்குகிறது.

----------------

இந்தியா - ஆஃப்கானிஸ்தான் அணிகளுக்கிடையேயான முதலாவது டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

தில்லியில் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.

-------------

ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

-------------